தேதி - 16.11.2022 **E.O.P.No.**78/2020 ம.சா.1 (வசந்தி)

1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி

கடந்த 02.01.2020ம் தேதி காலை 8 மணிக்கு மேற்படி வாக்குப்பெட்டிகள் வைத்துள்ள அறை அனைத்து கட்சி முக்கியஸ்தர்கள் மற்றும் வேட்பாளர்கள் முன்னிலையில் அரசு முத்திரை அகற்றப்பட்டு மேற்படி வாக்குப்பெட்டிகள் வைத்திருந்த அறை திறக்கப்பட்டது என்றால் சரிதான். பொதுவாக தேர்தலில் யார் அதிக வாக்குகள் பெற்றாரோ அவர் தான் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார் என்றால் சரிதான். மேற்படி தேர்தல் வாக்குச்சீட்டு முறையில் நடைபெற்றது என்றால் சரிதான். வாக்களிக்க வரும் அனைவரும் வாக்குச்சீட்டினை வாக்குப்பெட்டியில் போடாமல் அவர்களே கொண்டு செல்வதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு கொண்டு செல்லும் போது வாக்குப்பதிவிற்கும், வாக்கு எண்ணிக்கைக்கும் வித்தியாசம் இருக்கும் என்றால் சரிதான். வாக்குப்பெட்டிகளில் உள்ள வாக்குகளை தரம்பிரிப்பதற்கென ஒரு அறை ஒதுக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். வாக்குகளை தரம்பிரிக்கும் இடத்தில் அந்தந்த வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் நியமிக்கப்பட்டிருப்பார்கள் என்றால் சரிதான். வாக்கு எண்ணும் பணிக்கு என் சார்பாக முகவர்களை நியமித்தேன். முகவர்களின் பெயர் ஒருவர் பெயர் தெரியும். அவர் பெயர் ஜெயராமன். மற்றொருவர் பெயர் தெரியாது. உள்ளாட்சி தேர்தலில் ஒரு வாக்குப்பெட்டியில் நான்குவகையான பதவிகளுக்கு பதிவு செய்யப்பட்டு நான்கு பதவிகளுக்கான வாக்குச்சீட்டுகள் தரம் பிரிக்கப்படும் என்றால் சரிதான். ஒவ்வொரு பதவிக்கும் ஒவ்வொரு வகையான நிறம் கொண்டு வாக்குச்சீட்டுகள் பயன்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நடவடிக்கைகள் அனைத்தும் தகுந்த போலிஸ் பாதுகாப்புடன் நடைபெற்றது என்றால் சரிதான். பிரிக்கப்பட்ட வாக்குகள் அனைத்தும் வாக்கு எண்ணும் அறைக்கு கொண்டு செல்லப்பட்டது என்றால் சரிதான். வாக்கு எண்ணும் அறைக்கு கொண்டு செல்லப்பட்ட வாக்குசீட்டுகள் அனைத்தும் வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் 3ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பணிபுரிகின்ற பணியாளர்கள் மேற்படி வாக்குச்சீட்டினை எங்களிடம் காண்பித்து நாங்கள் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு தான் எந்தெந்த வாக்குகள் எந்தெந்த சின்னத்தில் ஒதுக்கப்பட்ட பெட்டிகளில் போடப்பட்டது என்றால் சரிதான். சில வாக்குகள் செல்லாத வாக்குகள் என்று கூறி ஒரு தனியாக பெட்டி வைத்திருந்தார்கள். அதில் போட்டு வைப்பார்கள். மேற்படி மொத்த வாக்குகளையும் படிவம் 22 மற்றும் படிவம் 24 ல் 3ம் எதிர்மனுதாரரால் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. படிவம் 22 மற்றும் 24 ஆகிய படிவங்களை நான் இந்த மனுவுடன் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். படிவம் 22 மற்றும் 24

ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்தால் மனுவின் உண்மைத்தன்மை தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாக்கு எண்ணிக்கைகள் அனைத்தும் போலிஸ் பாதுகாப்புடன் சி.சி.டி.வி கேமராவில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தேர்தலில் 4ம் எதிர்மனுதாரர் என்னை விட அதிகமாக 12 வாக்குகள் பெற்றதால் தான் 3ம் எதிர்மனுதாரர் வெற்றி பெற்றதாக அறிவித்தார் என்று சொன்னால் சரியல்ல. 4ம் எதிர்மனுதார் வெற்றி பெற்றதாக அறிவித்ததை இரத்து செய்யக்கோரியும், மீண்டும் மறுவாக்குஎண்ணிக்கை கோரியும் உடனடியாக புகார்மனு கொடுத்தோம். 3ம் எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் புகார் மனு கொடுத்தோம். புகார் மனு கொடுத்தது சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.3ம் எதிர்மனுதாரர் முறையாக தான் வெற்றியை அறிவித்தார் என்றும் அதனால் தான் 3ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் நான் புகார் மனு கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய கணவர் அரசு அலுவலர் என்பதால் என்னுடைய தோல்வியை தாங்கி கொள்ள முடியாமல் காலதாமதமாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார் கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட மறுநாளே மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்தோம். ம.சா.ஆ.4 ஆன ஆவணத்தின்படி 04.01.02020ம் தேதியன்று தான் புகார் மனு கொடுத்தேன் என்றும், தற்போது வழக்கிற்காக மறுநாளே புகார் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.4 ஆன மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய புகார் மனுவில் என்னுடைய கையெழுத்து இல்லை என்று சொன்னால் சரிதான். ம.சா.ஆ.4 ஆன ஆவணம் என்னால் கொடுக்கப்பட்ட ஆவணம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் 1, 2 எதிர்மனுதாரர்கள் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு தான் 3ம் எதிர்மனுதாரர் தேர்தல் முடிவுகளை அறிவித்தார் என்றும், எந்தவிதமான முறைகேடுகளும் இல்லை என்றும், 4ம் எதிர்மனுதாரர் வெற்றி பெற்றதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாமல் பொய்யாக 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.